திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நான் சொல்லுவது கலைவாணர் அரங்கத்தில் நடந்த விழாவைப் பற்றியதல்ல. சினிமாக் கொட்டகைகளில் நடந்த விழாபற்றிச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதைத்தான் நான் சொன்னேன். ஐந்து சதவிகிதம் டிக்கட்டுகள் உறுப்பினர்களுக்காக ஒதுக்கி வைத்திருந்தோம். ஒரு நபருக்கு இரண்டு டிக்கட்டுகள் கொடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது. யார் முன்னால் வருகிறார்களோ அவர்களுக்குத் தர முடிவு செய்து, அப்படி வழங்கப்பட்டது. நியாயமாகப் பார்க்க வேண்டியவர்கள் வந்து டிக்கட்டுகளை வாங்கியிருந்தால், நியாயமாகக் கிடைத்திருக்கும். ஆனால் அப்படியில்லாமல், யார் யாருக்கோ எழுதிக் கொடுத்தால், முன்னாலே வந்த யாரோ வாங்கிக்கொண்டு போக, உண்மையிலேயே பார்க்க வந்த உறுப்பினர்களுக்கு டிக்கட் கிடைக்கவில்லை.

(பிற்பகல் 4-10)

THIRU J. M. MIAKHAN: Mr. Vice-Chairman, may I know why so much of interest is being shown to see these foreign films and why our legislators should be so very anxious to see those foreign films? Is there anything special in them?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அதற்கு உறுப்பினர்தான் பதில் சொல்ல வேண்டும்.

Tamil Nadu Graduate Teachers' Association

* 33*Q*.—THIRU P. R. THOMAS & Thiru C.R. LAKSHMIKANTHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Graduate Teachers' Association has sent any representation to the Government for treating the period of absence, from duty, of the Graduate teachers, during their agitation in March 1973, as on special casual leave; and

(*b*) if so, the action taken thereon?

தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் சங்கம்

திரு. பி. ஆர். தாமஸ் & திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பட்டதாரி ஆசிரியர்கள் 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடத்திய போராட்டத்தின் போது வேலைக்கு வராமல் இருந்த நாட்களைச் சிறப்புத் தற்செயல் விடுப்பாகக் கருதுமாறு கேட்டு கோரிக்கை எதனையும் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், அரசுக்கு அனுப்பி உள்ளதா?

1978 செப்டம்பர் 7]

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) தமிழகத்தின் பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : ஈட்டிய விடுப்பு முழுவதையும் ஒரு பகுதியினர் பயன்படுத்திவிட்டதால் அவர்கள் ஊதியத்தை இழந்திருக்கிறார்கள். இரண்டாவது, தனியார் பள்ளிகளில் 1968 ஆம் ஆண்டிலிருந்துதான் ஈட்டிய விடுப்புச் சலுகை வழங்கப்பட்டது. ஆகவே ஆசிரியர்கள் எல்லாம் ஊதியத்தை இழந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு அனைத்துப் பிரிவினருக்கும் சமமாக ஊதிய உயர்வு இழப்பு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள கல்வி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பட்டதாரி ஆசிரியர்கள், 1973 ஆம் ஆண்டு போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டு, பள்ளிக்கு வராத காலத்தைச் சிறப்பு விடுப்பாகக் கருத வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்துள்ளனர். இக்கோரிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 1973 ஆம் ஆண்டு மார்ச்சில் அரசு ஊழியர்கள் சங்கத்தினர் போராட்டத்தை நடத்தினார்கள். அவர்கள் வைத்திருந்த கோரிக்கைகள் ஆசிரியர்களுக்கும் பொருத்தமாக இருந்ததால், ஆசிரியர்களும் பங்கேற்றனர். ஆசிரியர்களுக்கு இப்போது எல்லா விடுப்பும் இல்லாத காரணத்தால், ஊதிய இழப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே ஆசிரியர்களுக்கும் இந்தச் சிறப்பு தற்செயல் விடுப்பைக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போடவும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்தப் போராட்டக் காலத்தை சிறப்பு விடுப்பாகக் கருதுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றி செலுத்துகிறோம். ஆனால் வன்முறையில் ஈடுபட்டவர்களுக்குக் கூட, மத்திய அரசு உடனடியாகச் சில சலுகைகளை வழங்க ஆணை பிறப்பித்து, நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, அதனுடைய பலன்களை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, எந்தப் பாவமும் செய்யாமல் அமைதியாக ஈடுபட்ட அந்தப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மிக விரைவாக இந்தச் சலுகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்கள் பாவம் செய்ததாக யாரும் சொல்லவில்லை. ஆகவேதான் இதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

* 34 *Q*.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Graduate Teachers' Association has made a representation to the Government, to sanction one post of Assistant Head-master for each Government High School in the State ; and

(*b*) if so, the action taken thereon ?

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி ஒவ்வொன்றிலும் ஓர் உதவித் தலைமையாசிரியர் பதவியை ஏற்படுத்த அனுமதி வழங்குமாறு கோரி தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், அரசிடம் முறையிட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : பொதுவாக ஆயிரம் மாணவர்களுக்கு மேல் ஒரு பள்ளியில் இருந்தால், அப்பள்ளிக்கு ஒரு உதவித் தலைமையாசிரியரை வழங்கலாம் என்று இருக்கிறது. ஆகவே தனியார் பள்ளியாக இருந்தாலும், அரசுப் பள்ளியாக இருந்தாலும், இவ்வாறு ஆயிரம் மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் ஒரு உதவித் தலைமையாசிரியர் பதவியை ஏற்படுத்த அரசு முன்வருமா ? மேலும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள மேல் நிலைப் பள்ளிகளிலும் வேலைப் பளு அதிகமாக இருப்பதால், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஒரு உதவித் தலைமையாசிரியர் பதவியை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதை அரசு தனியாகப் பரிசிலிக்கிறது.